புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# நற்றிணை காட்டும் ஐந்திணை உணவுகள்

சி.இராம்சந்தர்
முனைவர் பட்ட ஆய்வு மாணவர்
(பகுதி நேரம்) தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக் கழகம், சேலம்

முனைவர் திரு.மோ.தமிழ்மாறன்
ஆய்வு நெறியாளர் & பேராசிரியர் (பணி நிறைவு)
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

ஆய்வுச் சுருக்கம்

நற்றிணை காட்டும் ஐந்திணை உணவுகள் எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய நவீன நாகரிக உலகில் உணவு என்பதும் பொருளீட்டக் கூடிய ஒரு பண்டமாக மாறியுள்ளதையும் மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்களால் உடல்நலனுக்கு கேடு உண்டாகி நோய்வாய்ப்படும் சூழலையும் நாம் உற்றுநோக்க வேண்டியுள்ள கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளோம்.

உணவு என்பது மனிதனின் வாழ்வின் ஓர் அங்கமாகும். உயிரை வளர்க்கும் உணவு உணர்வையும் வளர்க்கிறது என்று சொல்லின் அது மிகையாகாது. அத்தகைய சிறப்பு வாய்ந்த உணவு பண்டைத் தமிழர் வாழ்வில் இயற்கையோடு இயைந்த ஒன்றாகியிருந்ததை சங்கத் தமிழ் நூல்கள் பறைசாற்றுகின்றன. துரித உணவே பெரும்பான்மை சமூக உணவாக மாறிவிட்ட சூழலில் நம் முன்னோர் வாழ்ந்து காட்டிய வாழ்வியலில் உள்ள உணவுப் பழக்க முறைகளை இன்றைய தலைமுறை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். பத்துப்பாட்டின் முதல் நூலான நற்றிணையில் ஐந்திணை காட்டும் உணவுப் பொருட்கள் மற்றும் உணவுப் பழக்கங்கள் இந்த ஆய்வில் சுட்டப் பெறுகிறது.

## நற்றிணை காட்டும் ஐந்திணை உணவுகள்

### முன்னுரை

உலகு தோன்றிய நாள் முதல் மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும் மாற்றம் அடைந்த வண்ணமே உள்ளது. உலகில் வாழ்ந்த பல நாகரிகங்களுள் தமிழர் நாகரிகமே தலைசிறந்த நாகரிகமாக இன்றளவும் திகழ்ந்து வருகிறது. பண்டைத் தமிழர் தம் வாழ்வை நமக்குக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குவது நம் சங்க இலக்கியங்களே எனின் அது மிகையாகாது.

தமிழரின் வாழ்வு எத்துணை ஏற்றம் பெற்றதென சங்க இலக்கியங்களைப் படித்து நாம் அறிந்து கொள்ளலாம். உலகிலேயே வேறு எந்த மொழி இலக்கியங்களிலும் இல்லாத, மக்களின் வாழ்வை அகம், புறம் என இரண்டாகப் பிரித்த தனிப்பெரும் பங்கு தமிழர்க்கே உரியதாகும்.

தமிழன் தான் வாழ்ந்த நிலத்தினையும் அதன் தன்மைக்கேற்ப ஐவகையாகப் பிரித்தனர். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனவும் காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை எனவும் வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமெனவும் கடலும் கடல் சார்ந்த நிலம் நெய்தலெனவும் முல்லையும் மருதமும் தன் இயல்பால் திரிந்து வாடிய நிலத்தினை பாலை எனவும் பிரித்தளித்தனர்.

சங்க இலக்கியங்களில் எங்கு நோக்கினும் இந்த ஐவகை நிலங்களை ஒட்டியே பாடல்கள் இயற்றப்பட்டிருப்பதை நம்மால் கூற முடிகிறது. ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள், அவர்களின் வாழ்க்கைமுறை, உணவு, உடை, காதல், வீரம் முதலிய அனைத்தையுமே சங்கப் பாடல்களில் நம்மால் காணமுடிகிறது.

அவற்றுள் உணவு குறித்த பாடல்கள் பண்டைத் தமிழரின் வாழ்வில் இன்றியமையாப் பங்கு வகித்த உணவுப் பொருட்களைக் குறித்தும் பழந்தமிழரின் உணவுப் பழக்கங்களையும் நாம் தெள்ளிதின் அறிந்து கொள்ள சான்றாக அமைகிறது. அங்ஙனம் ஐவகை நிலங்களுள் உணவுகளை பின்வருமாறு காண்போம்.

குறிஞ்சித் திணை

தேன்

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என அழைக்கப்படுவதை நாம் அறிவோம். மலைகளிலிருந்து கிடைக்கும் முக்கிய உணவுப் பொருளாக இன்றளவும் விளங்குவது தேன் ஆகும். உணவாகவும் மருந்தாகவும் பயன்பாட்டில் உள்ள தேன் குறித்த குறிப்புகள் நற்றிணையில் பல இடங்களில் சுட்டப் பெறுகின்றன.

தலைவனுடைய நட்பைக் குறித்து தோழிக்குக் கூறும் தலைவி தாமரையின் குளிர்ந்த மகரந்தங்கள், உயர்ந்து நிற்கும் சந்தன மரத்தின் தாதுக்கள் ஆகியவற்றை ஊதி சந்தன மரத்தின் உச்சியில் கொண்டு சென்று வைத்த தேனைப்போல உறுதியாக உயர்ந்ததெனக் கூறுகிறாள்.

‘தாமரைத் தண் தாது ஊதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீம் தேன் போல’

எனும் கபிலரின் வரிகள் மலைகளில் கிடைக்கப்பெறும் தேனின் உயரிய தன்மையை நாமறிய உதவுகிறது.

தினை

இன்றைக்கு நம் உணவுமுறையில் இன்றியமையாப் பங்கு வகிக்கும் சிறுதானியங்கள் பண்டைக் காலம் தொட்டு மலைகளில் விளைந்து மக்களால் உண்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை சங்கப் பாடல்களில் காணலாம்.

தினைப்புனத்தைக் காவல் காக்கும் மழவர் தினை கவர வந்த விலங்குகளை அம்பெய்து வீழ்த்தியதும் உயர்ந்த மலைகளில் இருக்கும் மயில்கள் அறியமாட்டா என்று கருதி கிளிகள் திணைக் கதிர்களை கவர்ந்து செல்வதையும் கபிலர் சுட்டிக்காட்டுகிறார்.

‘ஏனல் காவலர் மா வீழ்த்துப் பறித்த
பகழி அன்ன...
மயில் அறிபு அறியா மன்னோ;
பயில் குரல் கவரும் பைம் புறக்கிளியே’

‘ஏனல்’ எனும் சொல் தினையைக் குறிக்கும்.

மேலும் மலைப்பக்கத்தில் கொடிச்சியால் காக்கப்படும் தினைப் பயிர்களை முதலிலே பறித்து உண்ணும் குரங்குகளையும் அவை மலைமேல் ஏறி உள்ளங்கைகளில் தினைக் கதிரை கசக்கித் தூய்மை செய்யும் அழகையும்,

‘கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்து விளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை ஏறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டு’

எனும் அழகிய வரிகளால் கவிஞர் கூறுகிறார்.

பெருங்கௌசிகனார் எனும் புலவர் கொல்லையில் உள்ள நீண்ட இலையுடைய முற்றிய கதிர்களை தாங்கமாட்டாமல் சாய்ந்த தினை குறித்து

‘............. புனத்த
நீடு இலை விளை தினைக் கொடுங்கால் நிமிர’

எனும் வரிகளில் விளக்குகிறார்.

பலா

தேனும் தினையும் மட்டுமல்லாது கனிகளும் கிழங்குகளும் நிறைந்து வளங்கொழிக்கும் மலைகள் நம் மலைகளாகும். வீட்டு முற்றங்களில் சிவந்த வேர்களைக் கொண்ட கிளைகள் தோறும் சுளைகள் உடைய பலா மரங்கள் மிகுந்திருப்பதை

‘...... .... செவ்வேர்ச்

சினை தொறும் தூங்கும் பயம் கெழு பலவின்
சுளையுடை முன்றில்'
என்று கபிலர் காட்டுகிறார்.

பன்றி:

பண்டைத் தமிழர் வாழ்வியலில் ஊண் உணவு சிறப்பிடம் பெற்றிருந்ததை பல பாடல்கள் உணர்த்துகின்றன.

'சிறுகட் பன்றிப் பெருஞ் சின ஒருத்தல்
சேறு ஆடு இரும்புறம் நீறொடு சிவண
.......... ............... ..................
கோள் நாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்கும் சிறுகுடியானே'
என்று அம்மள்ளனார் எனும் புலவர்,

காட்டு நாய்கள் சூழ்ந்து கொன்ற பன்றியை அவற்றிடமிருந்து விலக்கிய கானவர் அவ்விறைச்சியை சிறுகுடிக்கு கொண்டு வந்த நிகழ்வைக் காட்டுகின்றார்.

முல்லைத் தினை

குறிஞ்சி பாடிய கபிலரே முல்லைக்கும் பாடல் இயற்றியுள்ளார். காடும் காடு சார்ந்த இடமும் முல்லையாகும்.

தலைவி காடு சூழ்ந்த நாட்டின்கண் வாழ்கிறாள். தலைவனைக் காணாது வாடும் தலைவி துன்புறுவதை பின்வரும் பாடல் அழகுபடக் கூறுகிறது.

கள்

உடும்பைக் கொன்றும் தவளையை அகழ்ந்தெடுத்தும் புற்றுகளை வெட்டி ஈசல்களை மண்ணைத் தோண்டி எடுத்தும் பகற்பொழுதில் முயலை வேட்டையாடியும் வாழும் வேட்டுவன் இரவின்கண் தன் அழகிய தோளில் சுமந்து வந்த பல்வகைப்பட்ட பண்டங்களைக் கொண்ட மூடைகளை ஏனைய கருவிகளுடன் போட்டுவிட்டு மிகுதியாகப் பருகிய கள்ளின் மயக்கத்தில் கிடப்பான் என்று பாடுகிறார்.

'உடும்பு கொலீஇ, வரி நுணல் அகழ்ந்து
நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி
எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல
பல்வேறு பண்டத் தொடை மறந்து, இல்லத்து
இருமடைக் கள்ளின் இன்கனி செருக்கும்
வன் புலக்காட்டு நாட்டதுவே'
கபிலர் பாடிய இப்பாடலில்; 'கள்' உண்ணும் பழக்கம் பழந்தமிழர்க்கு இருந்ததைக் காட்டுகிறது.

மருதத் திணை

வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதமாகும். உழவே மருத நிலத்தின் தலையாக தொழிலாக விளங்கியது. இன்றும் விளங்குகிறது.

வரால் மீன்

எருமை மாடுகள் உழவுக்குத் துணையாக நிற்பதையும் உழவனின் உணவு உண்ணும் பாங்கினையும் இப்பாடல் உணர்த்துகிறது. தூங்கலோரியார் எனும் புலவர்

'கருங்கண் வராஅல் பெருந்தடி மிளர்வையொடு
புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ் சோறு
கவர் படு கையை கழும மாந்தி
நீர் உறு செறுவின் நாறு முடி அழுத்த'
என்று பாடுகிறார்.

இரவில் தூங்காமல் குளிர்ந்த இருள் அகலும் விடியற்காலத்தே கரிய கண்களையுடைய வரால் மீனின் பெரிய துண்டுகளை அவை மிளிறுமாறு குழம்பிலே பிறழ விட்டு உணவுக்குரிய அரிசியாற் சமைத்த சோற்றை விரும்பி உண்ணும் கையை உடைய உழவன் என்று காட்டுகிறார்.

இவ்வாறு தமிழர் தம் வாழ்வில் மீன் உணவு தொன்றுதொட்டு விரும்பி உண்ணும் உணவாக இருந்து வந்துள்ளதைக் காணலாம்.

நெய்தல் திணை

கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தலாகும். தமிழர் தம் வாழ்வில் கடல் நீக்கமற நிறைந்துள்ளதை தொன்றுதொட்டு காணலாம். மீன் பிடித்தல், கடலில் மூழ்கி முத்தெடுத்தல், கடற்பயணம் மேற்கொண்டு அயல்நாடுகளைக் கண்டடைந்து வாணிபம் செய்தல் என உலகுக்கே தமிழினம் ஒரு முன்னோடியாக விளங்கியது.

நாவற்கனி

பொங்கி வரும் அலைகள் மோதும் மணற்பரப்பு கடற்கரை. அங்கு உதிர்ந்த புல்லிய காம்புடைய நாவற்கனிகள் வண்டுகள் போல் தோற்றமளிப்பதை அம்மூவனார் படம் பிடித்துக் காட்டுகிறார்.

'பொங்குதிரை பொருதவார் மணல் அடைகரைப்
புன் கால்
நாவல் பொதிப் புற இருங்கனி'

கள்

பண்டைத் தமிழ் ஊர்களின் சிறப்புகளை சங்கப் பாடல்கள் விவரித்துக் கூறுகின்றன. கலங்கிய நீரையுடைய உப்பங்கழி சூழ்ந்த தோட்டங்களைக் கொண்ட காண்ட வாயில் எனும் ஊர் பற்றி உலோச்சனார் கூறுகிறார். அவ்வூரில் தழைத்து முற்றிய பனையோலையொடு முட்களைச் சேர்த்துக் கட்டப்பெற்ற வேலிகள் இருக்கும். அவ்வேலியகத்தே பனை மரங்கள் உயர்ந்தும் ஒலிமிக்கதுமாம் எம் ஊர். அங்கே மீன் வேட்டைக்குக் செல்வோர்க்கு தப்பாமல் வேட்டை வாய்க்க மழை பொய்க்காமல் பெய்யும். அதனால் வலைவளம் சிறக்கும். அவ்வாறு பிடித்த மீன்களை பரதவர் பிற நாட்டிற்சென்று விற்பனை செய்வர். அப்பொருளைத் தந்து கரிய பனையின் இனிய பிழிவான கள்ளை உண்போர் மகிழ்ந்திருப்பர் என்பதை,

'வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்ப
பாட்டம் பொய்யாது பரதவர் பகர
இரும்பனந் தீம் பிழி உண்போர் மகிழும்
ஆர்கலி யாணர்த்து ஆயினும்'

எனும் வரிகளில் உலோச்சனார் அவ்வூரின் செழிப்பை நமக்கு எடுத்துக்காட்டுகிறார். மக்கள் கள்ளுண்டு மகிழ்ந்திருக்கும் செழுமை மிக்க ஊர் என்று காண்கிறோம்.

சுறா

நெய்தல் நிலத்தின் முக்கிய உணவு மீன் ஆகும். மீன் பிடித்தொழிலே முக்கியத் தொழிலாகும். நிலத்தையுடைய சுறாமீனை அறுத்து காயவைத்தல் வேண்டி, அவை வெயிலிற் காயும் போது கூட்டமாய்த் திரளும் பறவைகளை நாங்கள் விரட்டும் தொழிலை மேற்கொள்பவர்கள் என்று புலவர் குறிப்பிடுகிறார்.

'நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ?'

எனும் வரிகள் கடல் நீரை விளை வயலாகக் கொள்கின்ற சிறிய வாழ்க்கையை பாங்காகச் சுட்டுகின்றது.

இறா

முடிச்சுகளைக் கொண்ட மீன் வலையால் முகந்து கொண்ட முடங்குதலையுடைய இறால் மீன்கள் பரப்பி வைத்திருக்கும் இடத்தினில் வந்து விழுகின்ற பறவைகளை விரட்டுவதிலேயே பகற்பொழுது கழிவதையும் சுறா மீன்களை வேட்டையாடுவதால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் நெய்தல் தத்தனார் எனும் புலவர்,

'...... .... இறாப் பரவைப்
படுபுள் ஓப்பலின் பகல் மாய்ந்தன்றே

கோட்டு மீன் எறிந்த உவகையர் வேட்டம் மடிந்து
எமரும் அல்கின'

எனும் வரிகளில் விவரிக்கிறார். அளவிற் சிறிய இறால் மீன்கள் முதல் உருவில் பெரிய சுறா மீன்கள் வரை வேட்டையாடி விற்று உண்டு வாழ்ந்த தமிழர் குறித்த குறிப்புகள் சங்கப் பாடல்கள் எங்கும் காணப்படுகின்றன.

மனிதர்கள் மட்டுமல்ல பறவைளும் தம் பிள்ளைகட்கு இரையூட்டும் காட்சி நற்றிணையில் காணப்படுகிறது.

'...... பெடையொடு
உடங்கு இரைதேரும் தடந்தாள் நாரை
ஐய சிறு கண் செங்கடைச் சிறுமீன்
மேக்கு உயர் சினையின் மீமிசைக் குடம்பை
தாய்ப் பயிர் பிள்ளை வாய் படச் சொரியும்'

என்று நாரை தன் பிள்ளைகட்கு சிறுமீன்களை இரையாகக் கொண்டு வந்து ஊட்டும் கடற்கரைக் காட்சியை பிசிராந்தையார் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பாலைத் திணை

முல்லையும் மருதமும் தன் இயல்பிலிருந்து கெடின் பாலையாக மாறும். தன் வளமை அழிந்து மணலும் மணல் சார்ந்த நிலமாகும் பாலை.

நெல்லி

வானத்தை மோதும் பெரிய கிளைகளையும் பொரிந்த அடியினை உடைய வேப்பமரம். அந்த வேப்பமர நிழலில், தொழில் ஒன்றும் கற்றியறியாத சிறுவர்கள் பொன்னை உரைத்து மாற்றுப் பார்க்கும் கல்லைப் போன்ற ஆடுகளத்தைக் கீறிக் கொண்டு நெல்லிக்காய்களை வட்டாகக் கொண்டு ஆடுவர் என்பதை

'வான் பொரு நெடுஞ் சினைப்
பொரி அரை வேம்பின் புள்ளி நீழல்
கட்டளை அன்ன இட்டு அரங்கு இழைத்து
கல்லாச் சிறா அர் நெல்லி வட்டாடும்'

எனும் வரிகளில் இளங்கீரனார் இயம்புகிறார்.

வெண்ணெல்

பாலை நிலத்தில் கிடைக்கப்பெறும் மூங்கில் அரிசி குறித்த குறிப்புகள் நற்றிணையில் காணப்படுகிறது.

'வெண்ணெல் அருந்திய வரி நுதல் யானை'

என்று மூங்கிலின் வெண்ணிற நெல்லைத் தின்ற வரி பொருந்திய நெற்றியுடைய யானை பற்றி நல்வெள்ளியார் நவில்கிறார்.

தயிர்-நெய்

தயிர்ப் பானையில் முடை நாற்றம் தீர விளம்பழத்தை இட்டு வைக்கும் பழக்கம் பண்டைத் தமிழரிடையே காணப்பட்டது. அத்தயிர் பானையை கயிறு ஆடித் தோய்த்தலால் மத்தின் தண்டு தேய்ந்திருக்கிறது. வெண்ணெய் தோன்றக் கடைதலால் தறியடியில் ஓசை முழங்கும் நிகழ்வு நடக்கும் வைகறைப் பொழுதை கயமனார் காட்டுகிறார்.

'விளம்பழம் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசம் தின்ற தேய்கால் மத்தும்
நெய் தெறி இயக்கம் வெளில் முதல் முழங்கும்
வைகு புலர் விடியல்'

என்று புலவர் காட்டுகிறார்.

நெல்

நெற்கூட்டில் நிரம்பக் கொட்டிய நெல்லையுடையது இவள் தாய் வீடு. வெயில் வீசுதலால் செழுங்காய்கள் திரங்கி முடம்பட்ட முதிர்ந்த பலா மரங்கள் நிரம்பியது அக்காடு எனத் தாய் வீட்டின் செழுமையைக் காட்டும் பாடலொன்று சாத்தந்தையாரால் பாடப்பெற்றுள்ளது.

'விண்டுப் புரையும் புணர் நிலை நெடுங்கூட்டுப்
பிண்ட நெல்லின் தாய் மனை ஒழிய'

எனும் பாடல் அத்தகைய செல்வ மிகுதியால் வாழ்ந்த தலைவி பாலை நிலத்தில் துயருருவதைக் காட்டுகிறது.

ஊண்

இரவில் விருந்தினர்க்கு உண்பதற்காக நெய்யை அளாவ விட்டு கொழுத்த ஊணைச் சமைத்ததனால் உண்டான புகை படிந்த நெற்றியில் சிறிய நுண்ணிய பலவாகிய வியர்வைத் துளிகள் உடைய தலைவி குறித்து

'நெய் துழந்து அட்ட
விளர் ஊண் அம்புகை எறிந்த நெற்றி
சிறு நுண் பல்வியர் பொறித்த'

எனும் பாடலால் இளந்தேவனார் ஊண் சமைத்து உண்ணும் பாங்கினை விவரிக்கிறார்.

மரைஆ

பாலை நிலத்தின்கண் செல்லும் மாந்தர்க்கு நுண்ணிய பசிமிக்க செந்நாய் கொன்று மிச்சம் வைத்த மரைஆ உண்ணும் உணவாகும் என்பதை,

'ஓய்பசிச் செந்நாய் உயங்கு மரை தொலைச்சி
ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய்நாட்டு
அருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சி ஆகும்'

என்று எயினந்தையார் எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

தமிழர் தம் வாழ்வில் உணவு இன்றயமையாத இடத்தைப் பெற்று இருப்பதைக் காண முடிகிறது. மரக்கறி உணவை விடவும் ஊண் உணவை தமிழன் விரும்பி உண்டான் என்பதை சங்க இலக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றது.

ஐவகை நிலங்களிலும் மக்களின் வாழ்க்கை முறை, அவர் ஆற்றும் தொழில், பயிர்கள், பழங்கள், மரங்கள் என இயற்கையின் செழிப்பும் பல்வகை மீன்களை அறியச் செய்யும் கடல் வளமும் நமக்கு சங்கப் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன என்றால் அது மிகையாகாது.

நிலவளமும் நீர்வளமும் மிக்க தமிழரின் நிலப்பகுதி பல்லுயிர்த் தன்மைக்கு மாபெரும் எடுத்துக்காட்டாகும். அத்தகைய உயரிய பண்பாடுடைய வாழ்வு உலகிலேயே தமிழர்க்கு மட்டுமே உரித்தான ஒன்றாகும். அத்துணை சிறப்புமிக்க தமிழ்க்குடியில் நாம் தோன்றியதற்கு மகிழ்ச்சியடைந்து சங்க இலக்கியம் எனும் செல்வச் சுரங்கத்தில் மேலும் பற்பல வாழ்வியற் கோட்பாடுகளை தேடிக் கண்டடைய வேண்டும்.

வாழ்க தமிழ்!

மேற்கோள்கள்

1. நற்றிணை – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
2. நற்றிணை – புலியூர்க் கேசிகன் தெளிவுரை, பாரி நிலையம்
3. கழகத் தமிழ் அகராதி – கழக வெளியீடு

********* ********* ********** ********* ********* ********** ********** **********